
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

மரம் 4 நவம்பர் 1995 கனி 4

# கிறிஸ்துவின் சபை
## Church of Christ

கி.பி 33க்குப் பின் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் முதன் முதல் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை மத் 16:18 அன்றியும் மனம் திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள் என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் லூக் 24:47-49 அந்தப்படியே பெந்தெகொஸ்தே என்னும் நாளில் எருசலேமில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டார்கள். இப்படியாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் அப் 2:38-47 இதுவே எருசலேமில் கி.பி 33க்குப் பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்ட முதல் கிறிஸ்துவின் சபையாகும்.

இச்சபை இன்றைய நாட்களில் உலகில் பல இடங்களில் இருக்கிறது. இச்சபையின் தலைவர் கிறிஸ்துவே எபே 1:22,23, 5:23. இவ்வுலகில் கிறிஸ்துவின் உபதேசத்தை முற்றிலும் கைக்கொள்ளும் ஒரே சபை கிறிஸ்துவின் சபையே. இந்த சபையானது இயேசுவின் வாக்குத்தத்தை ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திலும் நடத்துவார் யோ 14:16,17,26- என்பதை அப்படியே ஏற்று, ஆவியானவரை

மறுதலிக்காமல், முழு வேதாகமத்தையும் எடுத்துக் கொண்டு, புரிந்துகொண்டு, கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்து நடந்து வருகிறது. இச்சபையில் யாரும் ஆடுவதுமில்லை, அந்நிய பாஷையில் பேசுகிறோம் என்று உளறுவதுமில்லை, கைத்தாளம், கீதவாத்திய சப்தம் எழுப்புவதுமில்லை. காரணம் புது உடன்படிக்கை தொழுகையில் இயேசுவோ, அவருடைய சீஷர்களோ, இவ்விதமாக தேவனை தொழுதுகொள்ளவில்லை. ஆகையால் யோ 4:24 ன்படி, இச்சபை ஆவிக்குரிய தொழுகையை கைகொண்டு வருகிறது. மேலும் ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின் படி போதிக்கக்கடவன் 1பேது 4:11ன்படி வேதத்தை மையமாக வைத்து கிறிஸ்துவின் சபை போதித்து வருகிறது. மத் 15:9 ன்படி மனுஷருடைய உபதேசங்களையும், கற்பனைகளையும் இச்சபை மறுதலிக்கிறது. குரு ரெவரெண்ட், பாதர் என்று இச்சபையின் ஊழியர்கள் அழைக்கப் படுவதில்லை. காரணம் வேதத்தில் மத் 23:7-10ல் இப்படி அழைக்கப் படாதிருங்கள் என்று வாசிக்கின்றோம். கிறிஸ்துவின் சபை ஊழியர்களோ 11கொரி 4:5, 3:6 ன்படி எங்களையோ பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயசுவின் நிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும பிரசங்கிக்கிறோம். புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்: அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது, எழுத்துக் கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது வானமும், பூமியும் ஒழிந்துபோம் லூக் 21:33 என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.

கிறிஸ்துவின் சபையைப் பற்றிய செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரனே! சகோதரியே! தம் முடைய சொந்த இரத்தத்தை சிந்தி எபே 5:27 அப் 20:28 சம்பாதித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் நீ அங்கமாயிருக்கிறாயா? அல்லது உலகத்தில் இயேசுவின் பெயரைச் சொல்லி சில மனிதகுழுவால்

துவங்கப்பட்ட பெயர் கிறிஸ்தவசபையில் இருக்கிறாயா? சற்று சிந்தித்துப் பார் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும்.. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா பவுலா உங்களுக்காகச் சிலுவையில்லறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? 1கொரி 1:12,13, இப்படி இன்று அநேக பிரிவினை சபைகள் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சபையில் தரித்துக்கொள்ள பயந்து, மனிதர்களுடைய யோசனைக்கு செவிகொடுத்து செல்லுகிறார்கள

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் யோவா 10:9 கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல 11 யோவா 9 இப்படியிருக்க மீறி நடக்கிற மக்களோடு ஏன் ஐக்கியப்பட விரும்புகிறீர்கள்? இன்றைக்கு இந்த சத்தியத்தை வாசித்து அறிந்து கொண்ட நீங்கள், உடனே ஓர் தீர்மானம் எடுங்கள். கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். அவருடைய மந்தையில் சேர்க்கப்பட ஆயத்தப் படுங்கள். ஓநாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சபையில் உங்களை சேர்த்து, வழிநடத்துவாராக! ஆமென்.

★ சத்தியத்தைக்குறித்து அறிந்து கொள்ள வாஞ்சிக்கிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். மேலும் உலகமெங்கும சத்தியத்தை சுமந்து செல்லும் கிறிஸ்துவின் சபை வெளியிடான ஆங்கில மாத இதழை பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு சந்தா அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

The World Evangelist
Post office Box 2279,
Florence,
ALABAMA 35630, USA.

---

நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம். யாத் 20:23

★ அக்டோபர் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்

1. சகோ. ஜெபர்சன் ஜேக்கப்-ஐரேனிபுரம்
2. சகோதரி. ஸ்டெல்லா இவான்ஞ்சலின்-வத்தலக்குண்டு
3. சகோதரி. மேரி எலிசபெத் கலைவாணி ,,

★ மனப்பாட வசனத்தில் வெற்றி பெற்ற சிறுவர்:-

கோபி வத்தலக்குண்டு

★ அக்டோபர் மாத இதழின் விடைகள்:

1. தீர்க்காயுசைப்பெறுவான் நீதி 28:16 (6) தூதர்களினிமித்தம்
2. அநியாயம் பிர 3:16 (7) இஸ்ரவேலர்
3. விசாரிப்புக்காரன் தானி 1:11 (8) 2000 . 3000
4. வேதபாரகர், பரிசேயர் மத் 23:2 (9) ஆம்
5. அலங்கரிப்பு 1 கொரி 12:24 (10) வலது பக்கம்

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. தனக்குண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடா விட்டால் அவன் எனக்கு என்னவாயிருக்கமாட்டான் என்றார?
2. கிறுஸ்துவின் சபையை எதின் வாசல்கள் மேற்கொள்ளவதில்லை?
3. ஒரு காரியத்தை செவ்வையாய் செய்வதற்கு எது பிரதானம்?
4. சத்தியத்தை கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக எதைத் திறவுங்கள்?
5. நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமனால் என்ன செய்ய வேண்டும்?
6. உங்கள் இரட்சிப்பு நிறைவேற எப்படிப் பிரயாசப்படவேண்டும்?
7. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சிக்கிறாரா?
8. சோம்பேறியின் வழி எவ்வேலிக்குச் சமானம்?
9. பாதாளமானது யாரைப் பட்சிக்கும்?
10. வசனத்தைக் காத்துக் கொள்ளாத துரோகிகளை நான்கண்ட போது எனக்கு அருவருப்பாயிருந்தது என்று சொல்வது யார்?

---

எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன். யாத் 32:33

MONTHLY MAGAZINE News Paper
WOR OF CHRIST Regd. No. 84661-92
Registerd No TN/DDL/19

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு
வத்தலக்குண்டு-624202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu624202.
S. India

Edited and publised by B. Arjunan M.A., A.Bs , on behalf of church of Christ 2.2.634/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.